# வானவில்

VAANAVIL
ISSUE – 2 FEBRUARY 2011

இதழ் - 2 மாசி 2011


# வடக்கு கிழக்கு உள்ளூராட்சி சபைகளை எதிர்நோக்கியுள்ள அபாயம்!



இலங்கையில் நாடு பரந்த ரீதியில் உள்ளூராட்சி சபைகளுக்கு மார்ச் 17 இல் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. 2009 மே 18ல் புலிகள் முற்றாக ஒழித்துக் கட்டப்பட்ட பின்னர், நாடு முழுவதும் ஒரே நாளில் தேர்தல்களை நடாத்துவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளமை, ஒரு மாபெரும் வரலாற்றுத் திருப்பு முனை என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தத் தேர்தலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பெயர் வேறுபாடு காரணமாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதினால், தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதிக சிரமமில்லாமல் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஜனநாயக முறைமையொன்றின் கீழ், எந்தவொரு அரசியல் கட்சியும் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு பூரண சுதந்திரம் உண்டு.

அந்த வகையில் முன்பு புலிகளின் கொலை வெறியாட்டங்களுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு பூரண ஆதரவு வழங்கி ஒத்துழைத்திருந்த போதிலும், அவர்களும் தற்போதைய ஜனநாயக அரசியல் சூழலை அனுபவிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஆனால், தமிழ் பொதுமக்கள் தான் இந்த தேர்தல் சம்பந்தமாக மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில் கடந்த 60 ஆண்டுகால தமிழ் தலைமைகளின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால், அவர்கள் மக்களின் வாழ்வாதார நலன்களை விட, தமது சுயநல அரசியல் ஆதாயங்களையே முக்கியமானதாகக் கருதிச் செயல்பட்டு வந்துள்ளதைக் காணலாம்.

தமிழ்க்காங்கிரசோ, தமிழரசுக்கட்சியோ, தமிழர் விடுதலைக் கூட்டணியோ அல்லது இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்போ, ஒருபோதும் பொதுமக்களின் அடிப்படை வாழ்க்கைப் பிரச்சினைகள் சம்பந்தமாக அரசாங்கங்களை அணுகியது கிடையாது. அவர்கள் தமிழ் பொதுமக்களின் வாக்குகளைக் கொள்ளையிடுவதற்காக, தமிழ் மொழி, தமிழ் பண்பாடு, தமிழனின் வீரம், பழம் பெருமை என உணர்ச்சிகரமான விடயங்களை ஊதிப்பெரிதாக்கி லாபம் பெறுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வந்துள்ளனர்.

உள்ளூராட்சி சபைகள் என்பது கிராமிய மட்டத்தில் மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிர்வாக அலகுகள். அதை திறம்பட செயல்படுத்துவதற்கு கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட சேவை மனப்பான்மை கொண்ட அணுகுமுறை வேண்டும். அந்த மனப்பான்மை தமிழ் கட்சிகளின் தலைமைகளுக்கு ஒருபோதும் இருந்ததில்லை.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க..

# வடக்கு முஸ்லீம்களின் நியாயமான கோரிக்கை

வானவில்

அண்மையில் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்த, யாழ்ப்பாண மாநகரசபையின் முன்னாள் பிரதி முதல்வர் எம்.சி.பசீர், வடக்கிலிருந்து 1990ம் ஆண்டு புலிகளால் விரட்டப்பட்ட முஸ்லீம் மக்களுக்கு அரசாங்கம் நஸ்ட ஈடு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்திருக்கிறார். அவருடைய இந்தக் கோரிக்கை நூற்றுக்கு நூறு வீதம் நியாயமானதும், கவனத்தில் கொள்ளப்பட வேண்டிதுமாகும்.

புலிகளுக்கும் அரசுக்கும் கடந்த 30 ஆண்டுகாலம் நடந்த போரில், அனைத்து இனங்களையும் சேர்ந்த மக்கள் பாதிக்கட்டது உண்மையாகும். இதில் தமிழ் மக்கள் கூடுதலாகப் பாதிக்கப்பட்டதும் உண்மைதான்.

ஆனால் மிகவும் வருத்தத்துக்கு உரியதும், கண்டனத்துக்கு உரியதுமான விடயமென்னவென்றால், ஒரு பக்கத்தில் பெரிய இனமொன்றின் பேரினவாத நடவடிக்கைகளிலிருந்து நீதி கோரிய நாம், மறுபக்கத்தில் எம்மையும் விட சிறிய இனமொன்றை, இனச் சுத்திகரிப்பு செய்து அழிக்க முற்பட்டது தான். அதன் மூலம் அவர்களை எம்மையும் விட மிகவும் துன்பமான ஒரு சூழலுக்குள் நாம் தள்ளி விட்டோம்.

போரினால் பாதிக்கப்பட்ட ஏனையவர்களின் பிரச்சினையை விட, வடக்கிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லீம்களின் பிரச்சினை வித்தியாசமானது. அவர்களை பல நூறு வருடங்கள் பாரம்பரியமாக வாழ்ந்த மண்ணிலிருந்து உடுத்த துணியைத் தவிர வேறு எதுவுமில்லாது, இரண்டு மணித்தியால அவகாசத்தில் புலிகள் விரட்டியடித்தனர். அது போர் பாதிப்பு என்பதை விட, அப்பட்டமான இனச் சுத்திகரிப்பாகும்.

அப்படி விரட்டப்பட்டவர்கள், போரினால் பாதிக்கப்பட்ட பல தமிழர்கள் செய்தது போல வெளிநாடுகளுக்கு ஓடித் தப்பவில்லை. இலங்கையையே தமது தாயகமாகக் கொண்டு, புத்தளத்திலும், நாட்டின் இதர பகுதிகளிலும் கடந்த 20 வருடங்களாக சொல்லொணாத் துயரங்களுக்கு மத்தியில் வாழ்க்கையை ஓட்டி வந்துள்ளனர்.

தற்போது யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர், அவர்களில் 5000 பேர் வரை தமது சொந்த மண்ணான யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர். எனவே, அவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதை உச்ச கட்ட மனிதாபிமானப் பிரச்சினையாகக் கருதி, அவர்களுக்கு போதிய நஸ்ட ஈடு வழங்க வேண்டியது அரசாங்கத்தின் தவிர்க்க முடியாத கடமையாகும்.

---

**தொடர்பு முகவரி:**

'வானவில்' இதழுக்கு கட்டுரைகள், துணுக்குகள், தகவல்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் என்பனவற்றை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

sunvaanavil@gmail.com

---

ஆண்டுக்கணக்கில் போராட்டத்தின் மூலம் மட்டுமே, சுரண்டும் வர்க்கத்தைத் தூக்கியெறியும் வர்க்கம் பழஞ்சமுதாயத்தின் சகதியிலிருந்து தன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டு, ஒரு புதிய சமுதாயத்தைப் படைக்கத் தகுதி பெறுகிறது.

- மார்க்ஸ்

கலாச்சாரம் என்பது மனிதனின் சிருஷ்டி உழைப்புத்தான். உழைப்புத்தான் இன்றும் நாளையும் அதன் அடிப்படை. மனிதகுலம் இவ்வுலகில் எப்படியெல்லாம் உழைத்தது, உலகின் வளர்ச்சிக்கு எப்படிப் பயன்படுத்தியது என்பதைக் கூறுகிற கதைதான் உலகின் பேரதிசயமான கதையாகும்.

- மார்க்சிம் கார்க்கி

# இலங்கைக் கடற்பகுதியில் இந்திய மீனவர்! பலிகள், இழப்புகள் தொடருமா?

சாமி



ஏனைய தொழில்களைப் போலவே மீன்பிடித்தொழிலிலும் நவீன முறைகள் புகுத்தப்படுவது இயல்பே. இதன் விளைவாக அதிகரித்த அறுவடையை நோக்கி மீன்பிடிப்பரப்பின் எல்லைகளை விரித்துச் செல்வது உலகெங்கும் நடைபெறுகிறது. முன்பிருந்த கட்டுப்பாடுகளை உடைத்து, ஒரு நாட்டுக்குள்ளேயே ஒருவர் பகுதிக்குள் இன்னொருவர் ஊடுருவுவது, அயல்நாடுகளின் எல்லைகளை ஊடறுப்பது, உலக நாடுகளின் கடற்பரப்பெங்கும் ஊடுருவிச் சென்று வளங்களை வாரிச்செல்வது, என்பனவெல்லாம் அன்றாடப் பிரச்சினைகளாகிவிட்டன.

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை என்று குறிப்பிடும் போது, தென் தமிழக மற்றும் வட இலங்கை மீனவர்களிடையேயான பிரச்சினையையே இங்கு குறிப்பிடுகின்றோம். அண்மைக் காலங்களில் இலங்கையின் மேற்குக்கரை மீனவர்கள் சிலர், தமிழக தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களின் கடற்பகுதிகளிலும், கிழக்கு மற்றும் தெற்கு மீனவர்கள் சென்னை மற்றும் ஆந்திரா கடற்பகுதிகளிலும் கைது செய்யப்பட்டதாக அறியப்பட்டாலும், (இதற்குள் கடத்தல்களில் சம்பந்தப்பட்டவர்கள் இருப்பதும் கவனிக்கத்தக்கது) மீனவர்களின் நாளாந்த வாழ்வாதாரப் பிரச்சினையாகக் கொள்ளப்படுவது, தென் தமிழக – வட இலங்கை மீனவர் பிரச்சினையேயாகும்.

'றோலர்' எனப்படும் இயந்திர இழுவைப் படகுகள் தமிழகத்தில் அறிமுகமாகிய போது ஆரம்பித்த இந்தப் பிரச்சினை, தற்போது நாற்பது ஆண்டுகள் வரை தொடர்கிறது. இந்த இழுவைப் படகுகளினால் இழுக்கப்படும் பாரிய பை போன்ற மடி வலை பெருமளவில் அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் கடல் உணவான இறால் வகைகள் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. குறித்த வளம் அதிகமாகக் காணப்படும் மன்னார், வன்னி, தீவுப்பகுதிகள், யாழ்ப்பாணம் மற்றும் வடமராட்சிக் கடற்பகுதிகளுக்கு, இந்திய மீனவர்கள் அத்துமீறி கூட்டங் கூட்டமாக பாரிய இயந்திரப் படகுகளில் வந்து, மடிவலையை இழுத்துச் செல்லும்போது, எமது மீனவர்களின் தொழில் ஆதாரமான, கடலில் விரித்திருக்கும் வலைகளை அறுத்துச் சேதப்படுத்தி விட்டுச் செல்கிறார்கள். அத்தோடு இவர்களது இழுவை மடிவலை மீன் வளத்தை வாரி வழித்து அழித்து விடுகிறது. இதிலும் தடைசெய்யப்பட்ட இரட்டை மடிவலைகளைப் பயன்படுத்துபவர்களும் உண்டு.

இலங்கையில் கடந்த முப்பது ஆண்டுகால யுத்த சூழ்நிலைகளில் மீனவர்கள் மிகுந்த தொழில் பாதிப்புக்குள்ளாகினர். மேற்குறித்த பகுதி மீனவர்களின் ஆழ்கடல் மீன்பிடி முற்றாகவே கைவிடப்பட்ட நிலைக்குப் போனது. இந்தக் காலகட்டத்தில் இந்திய மீனவர் வருகை, அவர்களுக்கும் இலங்கைக் கடற்படைக்கும் இடையிலான விடயமாகவே பலராலும் கருதப்பட்டது. ஆரம்பத்திலிருந்தே இந்த விடயத்தில் இலங்கை மீனவர் தரப்பிலிருந்து எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கும், கோரிக்கைகளுக்கும் முக்கியத்துவம் வழங்காதிருந்த தமிழ் தேசியவாதிகள், இதை வைத்தாவது இலங்கைக்கு இந்தியாவிடமிருந்து அடிவாங்கிக் கொடுக்க முடியாதா என்ற நப்பாசையை வளர்க்கும் அரசியலை, தமிழ்நாட்டு அரசியல் கூத்தாடிகளுடன் சேர்ந்து நடாத்திக் கொண்டிருந்தார்கள். இன்றும் கூட அதனையே தொடர்கிறார்கள்.

இன்று மீண்டும் தொழில் ஆரம்பிக்கும் சூழ்நிலைகளில், கடல் வளம் குறைந்த நிலையோடு,

தொடர்ந்தும் வலைகள் சேதப்படுத்தப்படுவதாலும், இலங்கை மீனவர்கள் பாரிய தொழில் இழப்புகளுக்கும் துன்பங்களுக்கும் ஆளாகிறார்கள். இதனால் மீனவர்கள் தங்கள் தொழில் பாதுகாப்பைக் கோரி அரசை வலியுறுத்தி வட பகுதியெங்கும் தொடர்ந்த போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். அதேநேரம் எழுபதுகளில் இருந்து முயற்சித்தது போலவே, தமிழக மீனவர் அமைப்புகளுடன் பேச்சுவார்த்தைகளும் நடாத்துகின்றனர்.

குறுகிய கடல் எல்லைகள் கொண்ட பகுதிகளில் எல்லை தாண்டுவது என்பது நடைபெறக்கூடியதே. அதற்காக இந்திய மீனவர்களைத் தாக்குவது அல்லது கொல்வது என்பது அதற்கான தீர்வாகாது. அதிலும் எல்லை தாண்டுவது என்பது இரு நாட்டு ஒப்பந்தங்களிலும் பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயமுமாகும். சாதாரண தமிழக மீனவர்கள் பாரம்பரிய மீன்பிடி முறைகளும் அருகிப்போக, இயந்திரப் படகுகளில் கூலிக்கும் பங்கிற்குமாக தொழிலுக்கு வருகிறார்கள். எல்லை தாண்டினால்தான் மீன் கிடைக்கும். மீன் கிடைத்தால்தான் கூலி கிடைக்கும் என்கிற நிலையிலேயே அவர்கள் உயிர் வாழ்கிறார்கள். உயிரைப் பணயம் வைத்துத்தான் உயிர் வாழ வேண்டிய அவலம் அவர்களுடையது.

சுருங்கக் கூறின் இலங்கையின் வட கடலுக்குள் போனால்தான், இந்திய மீனவர்களுக்குத் தொழில் கிடைக்கிறது. ஆனால் இவர்கள் போனால், இலங்கை மீனவர்களுக்கு வளமும் போய் தொழில் ஆதாரங்களும் சேதப்படுத்தப்படுகிறது. இருபுறமும் உள்ள நிலைமைகளைக் கணக்கிலெடுத்து, சமரச ஏற்பாடுகள் மற்றும் நீண்டகால தீர்வுக்கான மாற்று ஏற்பாடுகள் பற்றி ஆராய்ந்து நடைமுறைப்படுத்த வேண்டியது, இரு நாட்டு அரசுகளினதும் அவசியக் கடமையாகும்.

கடந்த 17-08-2010ல் தமிழகத்தில் நடைபெற்ற இரு நாட்டு மீனவர் பிரதிநிதிகளின் சந்திப்பின் போது, இலங்கைக் கடற்பரப்பில் ஐந்து கடல் மைல்களுக்கு அப்பால் வருடத்தில் எழுபது நாட்கள் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கலாம், இரட்டைமடி வலை உபயோகிக்கக் கூடாது, என்பது போன்ற உடன்பாடுகள் எட்டப்பட்டதாக அறிய முடிகிறது. இத்தகைய உடன்பாடுகள் இரு தரப்பும் பயன்பெற உதவக்கூடியவை. எனினும் இவற்றை நடைமுறைப்படுத்துவது மற்றும் கண்காணிப்பது என்பது இரு நாட்டு அரசுகளின் கையிலேயே உள்ளது. குறுகிய கடற்பரப்பு, அருகிவரும் கடல் வளம், நுகர்வின் அதிகரிப்பு என்பவற்றை ஈடுசெய்ய, மீனவர் வாழ்விற்கான நீண்டகால அடிப்படையிலான மாற்று ஏற்பாடுகளும் அரசுகளாலேயே செய்ய முடியும்.

இதை விடுத்து, ''என் தமிழ் மீனவனை அடித்தால், இங்கு இருக்கும் சிங்கள மாணவனை நான் அடிப்பேன்'' என்று 'டயலாக்' பேசி, சினிமா காட்டும் தமிழ் நாட்டு அரசியல்வாதிகளின் கூத்துகளும், ஏனோ தானோ என்று இருந்துவிட்டு, தேர்தலையும் தமிழ் நாட்டுக் கூட்டணிகளையும் மனதிற் கொண்டு, அவசர அவசரமாக வெளியுறவுச் செயலரை அனுப்பி கூட்டறிக்கை விடும் இந்திய மத்திய காங்கிரஸ் அரசின் சந்தர்ப்பவாதமும், தீர்வை நோக்கிய நகர்வாக அமையாது.
*

## புதிய நூல் வெளியீடு

கம்யூனிஸ்ட் மு.கார்த்திகேசன் அவர்கள் மறைவின் 33வது நினைவு தினத்தையொட்டி, கடந்த வருடம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில், நினைவு தின உரையாற்றிய கொழும்பு பல்கலைக்கழக புவியியல்துறைப் பேராசிரியர் அன்ரனி நோபேர்ட் அவர்களின் உரை ''பூகோளம் வெப்பமடைதல்'' என்ற தலைப்பில் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் வெளியீட்டு விழாவும், ஆய்வரங்கும் பெப்ரவரி 13, 2011 அன்று கொழும்பு – 6ல் அமைந்துள்ள பெண்கள் கல்வி ஆய்வு நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கலாநிதி செல்வி திருச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பேராசிரியர்கள் எம்.கருணாநிதி, சபா.ஜெயராசா மற்றும் கொழும்பு இந்துக்கல்லூரி துணை முதல்வர் த.இராசரத்தினம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

நூலைப் பெறவிரும்புவோர் பின்வரும் தபால் அல்லது மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

Sri Lanka Progressive Art & Literature Association
18, 6/1, Collingwood Place
Colombo – 6
Sri Lanka
e-mail: kailashpath@yahoo.com

**து**னீசியாவின் சர்வாதிகார ஆட்சி அந்நாட்டு மக்களால் வீழ்த்தப்பட்டு விட்டது. துனீசியாவில் உள்ளூர் அதிகார வர்க்கத்தின் அநியாயத்தைப் பொறுக்க முடியாத நிலையில், ஒரு போராளி தன்னைத்தானே தீ மூட்டியதைத் தொடர்ந்து மாபெரும் மக்கள் எழுச்சி வெடித்துக் கிளம்பியது. அதைத் தொடர்ந்து 23 வருடங்களாகச் சர்வாதிகார ஆட்சி நடாத்திய ஜனாதிபதி ஜனாதிபதி சைன் எல் அபிடைன் பென் அலி 'தலை தப்பினால் தம்பிரான்



# துனீசிய – எகிப்திய மக்களின் வீரம் செறிந்த போராட்டங்கள் தரும் பாடங்கள்

**பாலன்**

புண்ணியம்' என நாட்டை விட்டுத் தப்பியோடி அமெரிக்காவின் இன்னொரு செல்லப்பிள்ளை நாடான சவூதி அரேபியாவில் தஞ்சம் புகுந்தார். அதைத் தொடர்ந்து யெமன், எகிப்து போன்ற நாடுகளின் சர்வாதிகார ஆட்சிகளுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தனர்.

குறிப்பாக கடந்த முப்பது ஆண்டுகளாக அமெரிக்கா உட்பட மேற்கத்தைய ஏகாதிபத்திய நாடுகளின் ஆதரவுடன் கொடுங்கோலாட்சி நடாத்தி வந்த எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கின் ஆட்சிக்கெதிராக, அந்நாட்டு மக்கள் லட்சக்கணக்கில் வீதிகளில் இறங்கிப் போராட ஆரம்பித்தனர். இந்தப் போராட்டங்களில் மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், புத்திஜீவிகள் என மக்கள் லட்சக்கணக்கில் அணிதிரண்டனர். அவர்கள் சமூக நீதியை வேண்டியும், தனிநபர் சர்வாதிகாரத்தை ஒழிக்கக் கோரியும் கோசங்களை எழுப்பினர்.

எகிப்திய மக்களின் வீரம் செறிந்த போராட்டத்தை, முதலில் இராணுவ பலத்தைப் பிரயோகித்து அடக்க முற்பட்ட முபாரக், இராணுவம் அதற்கு ஒத்துழைக்காததால் பின்வாங்க வேண்டி ஏற்பட்டது. அதன் பின்னர் சில அரசியல் சீர்திருத்தங்களைத் தான் மேற்கொள்வதாகவும், அதேவேளையில் அரசியல் சாசனப்படி தனது பதவிக்காலம் முடிவடையும், இவ்வருடம் செப்ரெம்பர் வரை பதவியில் தொடரப் போவதாகவும் அறிவித்தார். ஆனால் அவரது இந்த ஏமாற்று வார்த்தைகளை ஏற்காத மக்கள், விட்டுக் கொடுக்காமல் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்தனர். மக்களின் போராட்டத்துக்கு முகம் கொடுக்க முடியாத முபாரக், இறுதியில் பெப்ரவரி 11ம் திகதி ஆட்சியிலிருந்து இறங்க வேண்டியதாகியது.

அரபு உலகத்தைப் பொறுத்தளவில் எகிப்து தான் அதிகளவு சனத்தொகை – அதாவது ஏறத்தாழ 8 கோடி சனத்தொகை கொண்ட நாடாகும். உலக நாகரீகத்தின் தொட்டிலாகவும் எகிப்து கருதப்படுகின்றது. எகிப்தின் தேசபிதா என வர்ணிக்கப்படும் நசார், தனது ஆட்சிக்காலத்தில் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான சிம்ம சொப்பனமாக விளங்கியவர். 'சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம்' என பெருமையுடன் வர்ணிக்கப்பட்ட பிரித்தானிய ஏகாதிபத்தியம் கைப்பற்றி வைத்திருந்த, எகிப்துக்குச் சொந்தமான சூயெஸ் கால்வாயை துணிச்சலுடன் நாட்டுடமையாக்கி, முழு ஏகாதிபத்திய முகாமுக்கும் மரண அடி கொடுத்தவர். அமெரிக்க – சோவியத் வல்லரசுகளுக்கு எதிராக 1961ல் அணிசேரா இயக்கம் உருவான போது, அதில் முன்னிலை வகித்தவர்.

அவரது மறைவுக்குப் பின்னர் ஏகாதிபத்திய சக்திகள் திட்டமிட்ட வகையில் அந்த புகழ்பூத்த மண்ணில் நாச வேலைகளை ஆரம்பித்தனர்.

அவர்கள் முதலில் அரபுக்களின் பரம வைரியான சியோனிச இஸ்ரேலை அங்கீகரிக்கும் படி எகிப்தை நிர்ப்பந்தித்து அதில் வெற்றி பெற்றனர். அதன் மூலம் அரபுலகில் பிளவை உருவாக்கினர். அதன் தொடர்ச்சியாக எகிப்து – இஸ்ரேல் சமாதான உடன்படிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றினர். இவற்றுக்கு நன்றிக்கடனாக, அரபு மக்களுக்கு எதிராக தனது மெய்ப்பாதுகாவலர்களால் ஒரு அணிவகுப்பின் போது சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் அதிபர் அன்வர் சதாத், தற்போது பதவி நீங்கிய ஜனாதிபதி முபாரக் ஆகியோரின் சர்வாதிகார அரசுகளுக்கு அமெரிக்கா ஆயிரக்கணக்கான கோடி டொலர்களை வருடாவருடம் வாரி வழங்கியது.

முபாரக்கின் 30 வருட கொடுங்கோல் ஆட்சி சகல வழிகளிலும் எகிப்பை திவாலாக்கியது. மக்கள் மத்தியில் வேலை இல்லாத் திண்டாட்டம், வறுமை என்பன மோசமாக அதிகரித்தது. சனத்தொகையில் 40 வீதமானோரின் தின வருமானம் சராசரி இரண்டு டொலர்களுக்கும் குறைவாகவே இருந்தது. மக்களுக்கு தமது கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம் முற்றாக மறுக்கப்பட்டது. முபாரக் ஆட்சியை எதிர்த்வர்கள் ஈவிரக்கமின்றி கொல்லப்பட்டனர் அல்லது சிறைகளில் அடைக்கப்பட்டனர். அதேவேளையில் முபாரக்கின் குடும்பம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமாக மூன்றரை லட்சம் கோடி பெறுமதியான சொத்துக்களை மக்களிடமிருந்து கொள்ளையடித்து சேர்த்து வைத்துக் கொண்டது. முபாரக்கின் இந்தக் கொள்ளைகளுக்கெல்லாம் முழு ஏகாதிபத்திய முகாமும் பூரண ஆதரவு வழங்கியது.

இப்பொழுது சர்வாதிகாரி முபாரக் ஆட்சிக் கட்டிலை விட்டு இறங்கிவிட்டாலும், அந்த நாட்டில் மக்கள் ஜனநாயகம் மலருமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. ஏனெனில் முபாரக், இவ்வளவு காலமும் தனது சர்வாதிகார ஆட்சிக்கு உறுதுணையாக நின்ற இராணுவத்திடமே ஆட்சிப் பொறுப்பைக் கையளித்துச் சென்றுள்ளார். அவர்கள் எகிப்தின் எதிர்காலத்தை எவ்வாறு மாற்றியமைப்பாாகள் என்று சொல்ல முடியாது. சில வேளைகளில் 'நெல்லைக் கொடுத்து உமியை வாங்கிய' கதையாகவும் அது முடியலாம். அதுதவிர முபாரக்கிற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட சக்திகளுக்கிடையில் பொது வேலைத்திட்டம எதுவும் இருந்ததாகவும் தெரியவில்லை. "முபாரக்கே வெளியேறு" என்பது மட்டுமே போராட்டக்காரர்களின் பொதுக் கோசமாக இருந்தது.

30 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவின் இன்னொரு சகபாடியான ஈரானிய மன்னர் பஹ்லவி சா மக்கள் போராட்டம் காரணமாக நாட்டைவிட்டு ஓடிய போது, அங்கு மக்கள் ஆட்சி மலரும் என பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் நடந்தது வேறு. அங்கு சாவின் இடத்தில் மிகவும் மோசமான இஸ்லாமிய அடிப்படைவாத ஆட்சியே அமைந்தது. அந்த ஆட்சி அங்கு சாவின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக முன்னணியில் நின்று போராடிய தொழிலாளர்கள், மாணவர்கள், புத்திஜீவிகளை அடக்கி ஒடுக்கியது. ஈரானில் இன்று இருக்கின்ற ஆட்சியின் வரவேற்கக்கூடிய ஒரேயொரு அம்சம், அது ஏகாதிபத்தியத்தை தீரமுடன் எதிர்ப்பது மட்டுமே.

எகிப்தில் எதிர்காலத்தில் அமையவிருக்கும் ஆட்சியைப் பொறுத்தவரையிலும் கூட, அது என்ன வகையான ஆட்சியாக அமையும் என்பதை இப்பொழுது கூறிவிட முடியாது. குறைந்த பட்சம் அங்கு அமையவிருக்கும் ஆட்சி, ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும், அதன் செல்லப்பிள்ளையான இஸ்ரேலிய சியோனிசவாதிகளுக்கு எதிராகவும் இருக்குமானால், அதுவே பெரிய விடயமாகும். ஆனால் அதற்கான வாய்ப்புகளும் மிகவும் குறைவாகவே இருக்கின்றன. ஏனெனில் அங்கு மக்கள் கிளர்ச்சி செய்து சர்வாதிகாரி முபாரக்கை வெளியேற்றியுள்ளார்களே தவிர, ஆட்சி அதிகாரத்தை அவர்கள் கைப்பற்றவில்லை. அதாவது இது தலையிடிக்கு தலையணியை மாற்றியது போன்ற ஒரு சம்பவம் மட்டுமே.

எது எப்படியிருந்த போதிலும் துனீசியாவிலும், எகிப்திலும் துணிகரமாக வீதிகளில் இறங்கிப் போராடி, அந்நாடுகளின் சர்வாதிகார ஆட்சியாளர்களை அதிகாரத்திலிருந்து விரட்டியடித்த அந்நாட்டு மக்களின் வீரத்துக்கு நாம் தலை வணங்கதத்தான் வேண்டும்.

அவர்களது போராட்டத்துக்கு முன்னால், அந்த சர்வாதிகார ஆட்சியாளர்களின் படைகளாலோ அல்லது

அவர்களது ஏகாதிபத்திய எஜமானர்களாலோ தாக்குப் பிடிக்க முடியாமல் போய்விட்டது. இதன் மூலம் மக்களின் ஐக்கியப்பட்ட போராட்டத்தின் சக்தியை உலகம் கண்டு கொள்ள முடிந்தது.

துனீசிய, எகிப்திய மக்களின் வெற்றியைத் தொடர்ந்து, கடந்த 30 வருடங்களாக யெமன் நாட்டில் ஏகாதிபத்தியத்தின் உதவியுடன் நடைபெற்று வரும் சர்வாதிகார ஆட்சிக்கு எதிரான போராட்டம் வேகம் அடைந்துள்ளது. அங்கும் நிச்சயம் வெகுவிரைவில் மக்கள் வெற்றிவாகை சூடுவார்கள். இந்தப் போராட்டங்களின் விளைவாக ஜோர்டானிலும், மொரக்கோவிலும், பஹ்ரைனிலும் நிலவும் மன்னராட்சிகளுக்கு எதிராகவும், அல்ஜீரியா, லிபியா, ஈரான் போன்ற நாடுகளிலுள்ள எதேச்சாதிகார ஆட்சிகளுக்கு எதிராகவும் போராட்டங்கள் வெடித்துக் கிளம்பியுள்ளன. மன்னராட்சி நடைபெறும் சவூதி அரேபியாவிலும் ஜனநாயகத்தை வலியுறுத்தி அரசியல் இயக்கம் ஒன்று உருவாகியுள்ளது. (இவற்றில் சில போராட்டங்கள் ஏகாதிபத்தியத்தால் பயன்படுத்தப்படும் வாய்ப்பும் உள்ளது)

கடந்த நூற்றாண்டின் பிற்கூறில் தென் அமெரிக்காவில் உருவான ஏகாதிபத்தியத்துக்கு எதிரான மக்கள் போராட்டங்கள், அங்கு பல ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசுகளை உருவாக்கியுள்ளது. அவற்றின் தொடர்ச்சியாக இப்பொழுது அரபுலகில் கிளர்ச்சிகள் வெடிக்க ஆரம்பித்துள்ளன. நிலப்பிரபுத்துவ முறையிலான ஆட்சி முறைகளாலோ, முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தாலோ மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பதையே இப்போராட்டங்கள் உணர்த்தி நிற்கின்றன.

இப்போராட்டங்கள் தன்னிச்சையானவையோ, ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றவையோ அல்ல. முழு முதலாளித்துவ – ஏகாதிபத்திய நாடுகளிலும் உருவாகியுள்ள பொருளாதார, அரசியல் நெருக்கடிகளால் இன்று அந்த அமைப்பு முறை ஆட்டம் கண்டு வருகின்றது. சென்ற வருடம் ஐரோப்பாவின் பல நாடுகளில் மக்கள் வீதிகளில் இறங்கிப் போரடினார்கள். அவற்றின் தொடர்ச்சியே தற்போதைய போராட்டங்கள். ஏகாதிபத்திய அமைப்பு முறை முழுமையுமாக நொருங்கி விழுவதற்கான அறிகுறிகளே இவை.

சீன மக்களின் மாபெரும் தலைவர் மாஓசேதுங் அவர்கள் ஒருமுறை கூறும்போது, “அடுத்த 50 முதல் 100 வரையிலான ஆண்டுகள், இதுவரை நாம் கண்டு கேட்டு இருக்காத, விண்ணையும் மண்ணையும் அதிர வைக்கும் போராட்ட காலகட்டமாக இருக்கும்” எனக் கூறினார்.

அதன் இடியோசை இப்பொழுது வானத்தில் முட்டி மோதுகின்றது.
*

---

## பரமசிவன் கழுத்தில் இருக்கும் வை.கோ!

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலர் வை.கோபாலசாமி அண்மையில் டில்லி சென்று பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்து அரை மணி நேரம் பேசினார். தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவது குறித்து பேசுவதற்காகவே, பிரதமர் சிங்கை சந்திக்க நேரம் கேட்ட வை.கோ, தனது சந்திப்பின் போது, வேறு விடயங்கள் பேசுவதிலேயே நேரத்தைச் செலவிட்டார்.

இந்திய மீனவர் விடயத்தில் இலங்கை கடற்படையை விட பாகிஸ்தான் கடற்படை தாராள மனதுடன் நடந்து கொள்வதாகப் புகழ்ந்தார். இலங்கையில் சீனா வெகு ஆழமாக ஊடுருவி வருவதாக சிங்குக்கு ‘கோள்’ மூட்டினார். கேரளாவில் ஆட்சியிலிருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இடதுசாரி அரசு மீது, முல்லைப் பெரியாறு நதி நீர் சம்பந்தமாக கடுரமான வசை பாடினார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவைப் புகழ்ந்த வை.கோ, அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் அவரே வெற்றி பெறுவார் என்பதை தான் முன்னரே கணித்துச் சொன்னதாகப் பெருமையும் அடித்துக் கொண்டார்.

வை.கோ அவர்களே! சபாஸ், நிற்க வேண்டிய இடத்தில் நிற்கிறீர்கள். வேஸ்டியை இறுக்கிக் கொண்டு இன்னும் உறுதியாக நில்லுங்கள்!!

**- வீரபாண்டி**

---

முன்னர் ஒருமுறை வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் சென்று வந்த ஒருவர், தனது பழைய அனுபவத்தை அண்மையில் நினைவு கூர்ந்தார்.

''புலிகளின் பகுதிக்குள் போனதும், பிரயாணப் படிவத்தை வாங்கி நிரப்பிக்கொண்டு, கரும பீடத்திற்குரிய வரிசையில் நின்றிருந்தேன். எனக்கு முன் நின்றிருந்தவரிடம் கரும பீடத்திலிருந்த பிள்ளை, ''எல்லாம் தொடுத்து எழுதி வைச்சிருக்கிறியள்:'' என்று சொல்ல, ''இனிக் கிளார்க்கு வைச்சுத்தான் நிரப்போணும்'' என்று அவர் முணுமுணுத்தது எனக்குக் கேட்டது.

அவர் விலக, எனது முறை வந்தது. எனது சிறீலங்கா அடையாள அட்டையையும், என்னால் நிரப்பப்பட்ட அவர்களது படிவத்தையும் கொடுத்தேன். ஒவ்வொன்றையும் சரி பார்த்துக்கொண்டே கேள்விகளைக் கேட்டார்.
''உங்களுக்கு இப்ப அறுபத்து நாலு வயது தானே? ஏன் அறுபத்து ஐந்து என்று எழுதியிருக்கிறியள்?''
''நான் தை மாதம் பிறந்தனான் பிள்ளை. மாதங்கள், நாள்கள் எண்டு கணக்கு எழுதாம, அறுபத்து ஐஞ்சு எண்டு போட்டனான்.''
அவர் அறுபத்து ஐந்தை வெட்டி, அறுபத்து நான்கு என எழுதினார்.




# பயணங்கள் பல விதம்! இது ஒரு விதம்!!

**- சன்னதன் -**

''என்ன ஐயா அடையாள அட்டையில கமம் எண்டு போட்டிருக்கு. நீங்கள் தொழில் என்ற இடத்தில கீறி விட்டிருக்கிறியள்?''
''அது எடுத்த காலத்தில விதானையார் போட்டது பிள்ளை. இப்ப கமமும் இல்லை, புலமும் இல்லை. கை நீட்டிறதுதான் தொழில். அப்பிடி எழுதட்டே?''
:''அதென்ன கை நீட்டிறது எண்டால்?''
''பெத்த பிள்ளை, பெறாத பிள்ளை எண்டு எல்லாரிட்டையும் கை நீட்டித்தான் பிழைப்பு ஓடுது. அதை ஏன் எழுதுவான் எண்டுதான் கீறி விட்டனான்.''

''ஐயா ஒரு மாதிரித்தான் கதைக்கிறியள். அதுசரி திரும்பி வாற திகதியையும் கீறித்தானே விட்டிருக்கிறியள்?''
''அது பிள்ளை கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ள போறவைக்குத்தான் தேவை. நான் யாழ்ப்பாணமெல்லோ போறன்''
''நீங்கள் சொந்த முகவரி எண்ட இடத்தில யாழ்ப்பாணம் எண்டும், வதிவிட முகவரி எண்ட இடத்தில வவுனியா எண்டும் எழுதியிருக்கிறியள். திரும்பி வர மாட்டியளே?''
''நான் தானே சொன்னனான் பிள்ளை. கஞ்சி கிடைக்கிற இடத்தில கதியால் போட்டிடுவனெண்டு! எப்ப வாறன் போறன் எண்டு எனக்கே தெரியாது. அதுசரி, முகமாலையில இந்த அடிக்கட்டையை வாங்கிப் போட்டுத்தானே விடுவினம்? பிறகு வாறதெண்டா புதுப்போம் வாங்கித்தானே நிரப்ப வேணும். பிறகேன் வாற திகதி கேக்கிறியள்? அதுசரிதான், படிச்ச ஆக்களெண்டால் இப்பிடித்தான் போமில போட்டிருக்கிறதெல்லாம் நிரப்ப வேணுமெண்டு நிப்பினம்''
''சரி சரி இந்தாங்கோ'' எனது பயணத்திற்கு மிக அவசியமான விசாரணை ஒன்றை நடாத்தி முடித்துவிட்ட சலிப்போடு, அனுமதிப் பத்திரத்தைத் தந்தார்.

பத்திரத்தைத் தரும்போது, ''நீங்களெல்லாம் வயோதிபர் அடையாள அட்டையைக் கொண்டு வந்தால் படிவம் நிரப்ப வேண்டியதில்லை, எங்களுக்கும் கரைச்சலில்லை'' என்றார்.
''அதுக்கும் அவங்கடை கச்சேரிக்குத்தான் போகோணும். அவங்களும் அறுபத்தைஞ்சு ஆகிவிட்டதோ எண்டுதான் கேப்பாங்கள்'' என்று சொல்லியபடியே கரும பீடத்தை விட்டு விலகினேன்.

''பாத்தியோடி பழசின்ரை கொழுப்பை! ஒருக்கா அறைக்கு அனுப்பி விட்டிருக்கலாம். விட்டிட்டன்.'' தன் சக ஊழியரிடம் சொல்வது என் காதில் கேட்டது.
அறை என்று இங்கு குறிப்பிடுவது, பலனாய்வுப் பிரிவினரின் அலுவலகம். இலக்கமிடப்பட்ட தனித்தனி அறைகள் இருக்கும். ஒவ்வொன்றிலும் விசாரணை அலுவலர்கள் இருப்பார்கள். 'சந்தேகத்துக்கு' உரியவர்களை இலக்கம் சொல்லி அறைக்கு அனுப்புவதும், பயணப் பத்திர எழுத்தர்களின் வேலைகளில் ஒன்று. பயணியின் பயணம் எங்கு முடியும் என்பதை அறையில் உள்ள 'அண்ணன்மார்' முடிவு செய்வர்.

''ஊரான ஊரான் தோட்டத்திலே
ஒருதன் தோட்டத்து வெள்ளரிக்காய்
காசுக்கு ரெண்டு விக்கச் சொல்லி
காயிதம் போட்டாண்டி வெள்ளைக்காரன்''
*

---

## • அவலை நினைத்து உரலை இடிக்கிறார்கள்!

''எகிப்தில் நடந்தது போல, விரைவில் இலங்கையிலும் மக்கள் மகிந்த ராஜபக்சவின் அரசிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்வார்கள்''

**- ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியா**

''எகிப்தில் நடந்தது போல இலங்கையிலும் மக்கள் சர்வாதிகார மகிந்த அரசிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தயாரென்றால், அதற்கு ஜே.வி.பி தலைமைதாங்கத் தயாராக இருக்கின்றது''

**- ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரதுங்க**

## • இன்று மட்டுமல்ல, அன்றும்தான்!

''படித்த யாழ் தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்தக்கு வெளியே பல தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். இலங்கை, இந்தியா, பர்மா, மலாயா முதலிய பல நாடுகளில், யாழ்ப்பாணக் கல்லூரியிலும் இதர ஆங்கிலப் பாடசாலைகளிலும் கற்றுக் தேறிய ஆயிரக்கணக்கானோர் உத்தியோக வாய்ப்புப் பெற்றுப் பல இலட்ச ரூபாய்களை இங்கே அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டுப் பணத்தைப் பெறாத ஒரு குடி தானும் இங்கே இல்லை எனக் கூறலாம்''

**- யாழ்ப்பாணத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மணியகாரராக (அக்கால உதவி அரசாங்க அதிபர் – காரியாதிகாரி – District Revenue Officer – DRO) இருந்த தம்பாப்பிள்ளை அதிகார் தமது அறிக்கை ஒன்றில் இவ்வாறு கூறியுள்ளார்.**

## • நமக்கு நாமே துணை

''நம்முடைய முயற்சியின் ஆரம்பத்தில் நம்மைப் பிறர் ஒப்புக்கொள்ள மாட்டார்கள், பலர் துணை செய்ய மாட்டார்கள். ஆனால் நம்பிக்கையைக் கைவிடாமல் இருந்தால், காலக்கிரமத்தில் வெளியுதவிகள் தாமே வரும். ஆரம்பத்தில் நமக்கு நாமே துணை.

எத்தனை இடையூறுகள், எவ்வளவு பெரிதாக வந்த போதிலும், எடுத்த காரியத்தை ஒரே உறுதியாக நடாத்திக் கொண்டு போவதே ஆரிய லட்சணம். அவ்வாறு செய்யக் கூடியவனே மனிதரில் சிறந்தவன்.

நம்பிக்கை உண்டானால் வெற்றியுண்டு. அந்த நம்பிக்கையின் முக்கிய லட்சணம் என்னவென்றால், விடா முயற்சி''

**- மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**

---

# ஆண்ட பரம்பரை ஆள நினைக்கும் பூமியில்
# இப்படியும் நடந்தது!



அமரர் எம்.சி.சுப்பிரமணியம் இலங்கையின் வடபகுதி தாழ்த்தப்பட்ட மக்களின் முக்கியமான தலைவர். அந்த மக்களுக்குச் சேவையாற்றுவதற்காக 'சிறுபான்மை தமிழர் மகாசபை' என்ற அமைப்பை உருவாக்கி, தனது இறப்பு வரை செயல்பட்டவர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை வடபகுதியில் 1940களில் மு.கார்த்திகேசன் ஸ்தாபித்த போது, ஆரம்பத்திலேயே அதனுடன் இணைந்து செயல்பட்டவர். அவரது அயராத சேவையைக் கௌரவித்து 1970ல் பதவிக்கு வந்த சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசு, அவருக்கு தாழ்த்தப்பட்ட மக்களின் சாபாக நியமன பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கிக் கௌரவித்தது. அந்தக் காலகட்டத்தில் புலிகள் அவரைப் பல தடவைகள் கொலை செய்யவும் முயன்றனர்.

ஆனால் இவையெல்லாம் நடப்பதற்கு பல ஆண்டுகள் முன்பே,

வட பகுதியின் உயர்சாதி வெறியர்கள் அவரையும் அவரது தோழர்களையும் உயிருடன் எரித்துக் கொல்வதற்கு முயன்ற சம்பவம் ஒன்று நடைபெற்றதை, இன்றைய தலைமுறையினர் பலர் அறிந்திருக்க வாயப்பில்லை.

இலங்கைக்கு பிரிட்டிஸ்காரனிடமிருந்து 1948 பெப்ரவரி 04ல் சுதந்திரம் கிடைத்தது. அதற்கு முன்னர் சுதந்திர இலங்கைக்கான முதலாவது தேர்தல் 1947ல் நடைபெற்றது. அந்தத் தேர்தலை நடாத்துவதற்கு முன்னர், சோல்பரி என்பவரின் தலைமையில் ஆணைக்குழு ஒன்றை பிரித்தானிய அரசு இலங்கைக்கு அனுப்பி வைத்தது. இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவது குறித்தும், பொதுத் தேர்தல் குறித்தும், இலங்கை மக்களின் கருத்தை அறிவதே ஆணைக்குழுவை அனுப்பியதின் நோக்கமாகும்.

சோல்பரி ஆணைக்குழுவை, அப்பொழுது தமிழ் மக்களின் 'முடிசூடா மன்னன்' என அழைக்கப்பட்ட, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் வடபகுதிக்கும் அழைத்து வந்தார். சோல்பரி குழுவினருக்கு பொன்னம்பலத்தின் சொந்தப் பிரதேசமான வடமராட்சியில் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. நெல்லியடியில் மணவறைகள் அமைத்து, மேளதாளங்களுடன் அவர்கள் வரவேற்கப்பட்டனர். பின்னர் பருத்தித்துறையில் இருந்த வாடிவீட்டில் அவர்களுக்கு விருந்துபசாரமும் வழங்கப்பட்டது.

அந்தக் காலகட்டத்தில், வடபகுதியில் இருந்த ஒரு சில படித்த தாழ்த்தப்பட்டவர்களுள் யோவெல் போல் என்பவரும் ஒருவராவார். அவருடைய ஆலோசனைப்படி, எம.சி.சுப்பிரமணியம் தலைமையிலான குழுவினர், சோல்பரி ஆணைக்குழுவினரை பருத்தித்துறை வாடிவீட்டில் வைத்துச் சந்தித்து, வடபகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் சாதி ஒடுக்குமுறை காரணமாக அனுபவித்து வரும் துன்பங்களை எடுத்து விளக்கினர். பொன்னம்பலம், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் சோல்பரியைச் சந்திப்பதைத் தவிர்ப்பதற்கு எவ்வளவோ முயன்றும், அது முடியாமல் போய்விட்டது.

அந்தக் காலகட்டத்தில் கரவெட்டியிலிருந்த கன்பொல்லை என்ற தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் கிராமத்தில், அவர்கள் வாழ்ந்த 25க்கும் மேலான குடிசைகளைச் சாதி வெறியர்கள் தீயிட்டு எரித்திருந்தார்கள். அதை வந்து பார்க்கும்படி சோல்பரி குழுவினரை எம்.சி.சுப்பிரமணியம் தலைமையிலான குழுவினர் அழைத்தனர். ஆனால் பொன்னம்பலம் தலைமையிலான உயர்சாதி வெறியர்கள் அவர்களைப் போகவிடாது தடுக்க முயன்றனர். இறுதியாக சோல்பரி குழுவினர் இரகசியமான முறையில் கன்பொல்லைக்குச் சென்று நிலைமையைப் பார்வையிட்டனர். கன்பொல்லையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையைக் கண்டு, சோல்பரி குழுவினர் அதிர்ச்சி அடைந்தனர். தாம் இது சம்பந்தமாக கடுமையான நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்துவிட்டுச் சென்றனர்.

அவர்கள் சென்ற பின்னர், எம்.சி.சுப்பிரமணியமும், அவருடன் வந்த கணபதிப்பிள்ளை, ஜேம்ஸ் என்போரும் நெல்லியடி சந்திக்கு பஸ் ஏறுவதற்காக வந்தனர். அவர்களது வருகைக்காகக் காத்திருந்த சாதி வெறியர்கள், எம்.சி.சுப்பிரமணியம் அணிந்திருந்த சால்வையைப் பறித்து (ஆரம்ப காலத்தில் அவர் காந்தீய பக்தராக இருந்த காரணத்தால் வெள்ளை நிற கதராடையே அணிவது வழக்கம்), அவர்கள் மூவரையும் அதனால் சுற்றிக் கட்டிவிட்டு, அவர்கள் மூவரையும் உயிருடன் கொளுத்திக் கொலை செய்வதற்காக மண்ணெண்ணெய் எடுத்து வந்தனர்.

எம்.சி குழுவினர் செய்வதறியாது திகைத்து நின்ற நேரத்தில், தற்செயலாக அவ்வழியால் ஜீப் வண்டியில் வந்த பொலிசார் தகவல் அறிந்து அவ்விடம் வந்து மூவரையும் விடுவித்து பாதுகாப்பாக அனுப்பி வைத்தனர். பொலிசார் வருவதைக் கண்டு சாதி வெறிக் கொலைஞர்கள் தப்பி ஓடித் தலைமறைவாகிவிட்டனர்.

இது அன்று நடந்தது. இன்றும் இதன் மிச்ச சொச்சங்கள் தொடரவே செய்கின்றன. இல்லாவிட்டால் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த செல்லன் கந்தையன் என்பவர் யாழ்.மாநகரசபை முதல்வராக இருந்த போது, புனரமைக்கப்பட்ட யாழ்ப்பாணப் பொது நூலகத்தை அவர் திறந்து வைக்க இருந்த சமயத்தில், அவர் அதனைத் திறந்து வைக்க முடியாதவாறு, புலிகள் அதன் திறப்புக் கோர்வையைப் பறித்துச் சென்றிருப்பார்களா?
*

---

## • பாண்டுங் மாநாடு

பாண்டுங் என்பது இந்தோனேசியாவின் ஒரு நகரம். 1955 ஏப்ரலில் இந்த நகரில் 23 ஆசிய நாடுகளும், 6 ஆபிரிக்க நாடுகளும் கூடி மாநாடு ஒன்றை நடாத்தின. இந்த மாநாட்டில் பங்கு பற்றிய முக்கிய தலைவர்களுள் அப்போதைய இந்தோனேசிய ஜனாதிபதி சுகார்டடோ, சீனப் பிரதமர் சௌ என் லாய், இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு உள்ளடங்குவர்.இந்த மாநாட்டில் தான் நாடுகளுக்கிடையில் இன்று கடைப்பிடிக்கப்படும் பரஸ்பர உறவுகளுக்கான 'பஞ்சசீலக் கொள்கை'' வகுக்கப்பட்டது. இந்தக் கொள்கையை சீனப் பிரதமர் சௌ என் லாய் முன் மொழிந்தார்.

''காலனித்துவத்தை அதன் எல்லா வடிவங்களிலும், செயற்பாட்டிலும் எதிர்ப்பது'' என்ற தீர்மானம் இங்கு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தீபெத்தில் நிலவிய அடிமை முறையை ஒழித்து, அதை விடுதலை செய்த சீனாவின் நடவடிக்கையை மாநாடு ஏற்றுக்கொண்டது.

## • கூட்டுச்சேரா இயக்கம்

கூட்டுச்சேரா இயக்கத்தின் முதலாவது மாநாடு யூகோஸ்சிலோவாக்கியாவின் தலைநகரான பெல்கிரேட் நகரில் 1961ம் ஆண்டு நடைபெற்றது. மொத்தம் 12 நாடுகள் அதில் பங்குபற்றின. அமெரிக்க – சோவியத் மேலாதிக்க வல்லரசுகளின் ஆதிக்கப் பிடியிலிருந்து நடுத்தர, சிறிய சுதந்திர நாடுகளின் சுயாதிபத்தியத்தைப் பாதுகாப்பதும், இன்னமும் எஞ்சியுள்ள காலனித்துவ ஆட்சிகளைத் தூக்கி எறிவதுமே, அந்த இயக்கத்தின் பிரதான நோக்கங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

முதலாவது மாநாட்டில், யூகோஸ்சிலோவாக்கிய ஜனாதிபதி மார்சல் டிட்டோ, இந்தியப் பிரதமர் நேரு, எகிப்திய ஜனாதிபதி நசார், இலங்கைப் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர். இன்று கூட்டுக்சேரா இயக்கத்தில் 120க்கும் அதிகமான நாடுகள் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றன.

## • தமிழ் வெறி மட்டும் போதாது…..

''தற்காலத் தமிழ் வளர்ந்துவரும் தமிழ். தமிழ் உரை நடைக்கு வயது இருநூற்றைம்பது ஆண்டுகள் என்றாலும், தமிழ் மொழியின் அமைப்பைச் சார்ந்து உரைநடையை எப்படி எழுத வேண்டும் என்பதைக் குறித்த நெறிமுறைகள் எதுவும் இன்னமும் உருவாகவில்லை. பொருளும், மொழியின் அமைப்பும் தமிழில் பின்னிக் காணப்படுவதால், தமிழ் உரைநடை எழுதப்பட வேண்டிய முறை குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இதுவரை உரைநடை அமைப்பைக் குறித்து கேள்விகளோ, கருத்துக்களோ உருவானதாகத் தெரியவில்லை. உதாரணமாக, தற்காலத் தமிழில் எந்தத் துணை வினைகளை, எந்தச் சூழல்களில் முதன்மை வினையோடு சேர்த்து எழுத வேண்டும், எங்கே பிரித்து எழுத வேண்டும்? தற்காலத் தமிழில் இருக்கின்ற, எண்பத்து மூன்று பின்னொட்டுகளை எப்படி எழுத வேண்டும்? நிறுத்தக் குறிகளுக்கான வழிமுறைகள் என்ன?''

- இமையம் என்பவரின் 'ஆறுமுகம்' நாவலுக்கு க்ரியா பதிப்பகம் எழுதிய முன்னுரையிலிருந்து

# வின்ஸ்ரன் சேர்ச்சில் இன்னொரு ஹிட்லர்?
# காந்தியை ‘அரை நிர்வாணப் பக்கிரி’ என்று வர்ணித்தவர்!

இரண்டாம் உலகப் போரின் போது பிரித்தானியப் பிரதமராக பெரும் புகழுடன் விளங்கியவர் வின்ஸ்ரன் சேர்ச்சில். ஆனால் அவரது அரசுதான் இந்தியாவின் வங்க மாநிலத்தில் சுமார் 30 இலட்சம் மக்கள் பட்டினியால் இறப்பதற்கு காரணமாகவும் இருந்தது என்ற தகவலை, இந்திய ஆய்வாளர் மதுஸ்ரீ முகர்ஜி ஆதாரங்களுடன் தனது நூலில் அம்பலப்படுத்தியிருக்கிறார்.

சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியம்’ என பெருமையுடன் வர்ணிக்கப்பட்ட பிரித்தானிய ஏகாதிபத்தியம், உலகையாண்ட காலத்தில் மக்களுக்கு ஏற்படுத்திய கொடுமைகள் வர்ணிக்க முடியாதவை. அதில் ஒரு சிறுதுளிதான் வங்கப் பட்டினிச் சாவுகள்.

எமது சின்னஞ்சிறு இலங்கைத் தாய்நாடும் பிரித்தானிய காலனித்துவ நுகத்தடியில் உழன்ற ஒரு நாடுதான். அவர்கள் திட்டமிட்டு உருவாக்கிவிட்டுச் சென்ற இனப்பிரச்சினை என்ற தீ தான், கடந்த கால் நூற்றாண்டாக யுத்தமாக கொழுந்துவிட்டு எரிந்து இலங்கையைச் சாம்பராக்கியது. யுத்தம் முடிந்த பின்னரும் இலங்கை மக்களுக்கு எதிரான நாச வேலைகளை பிரிட்டன் நிறுத்திய பாடாக இல்லை.

காந்திஜியும் ஏனைய தேசபக்தர்களும் ‘வெள்ளையனே வெளியேறு’ என்று உரத்துக் கோசமிட்டு, பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்டு வெற்றிவாகை சூடினர். ஆனால் எமது ‘ஈழவிடுதலை வீரர்களோ’, ‘வெள்ளையனே உள்ளே வா’ என உரக்கக் கூவி ஏகாதிபத்தியவாதிகளுக்கு நிலபாவாடை விரிக்கக் காத்திருக்கின்றனர்.

உருப்படுமா எமது போராட்டம்?

கீழே தரப்பட்டுள்ள கட்டுரை ‘கல்கி’ வார வெளியீட்டில் ஞாநி எழுதி வரும் ‘ஓ பக்கங்கள்’ பகுதியொன்றின் சுருக்கமாகும். அவருக்கும் கல்கி இதழுக்கும் எமது நன்றி.

**ஆசிரியர் குழு**

**இ**லட்சக்கணக்கான மக்களின் சாவுக்குக் காரணமாக இருந்த ஹிட்லருக்கும், பிரிட்டிஸ் பிரதமராக இருந்த சேர்ச்சிலுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. வங்காளத்தில் 1943ல் ஏற்பட்ட பெரும் பட்டினிச் சாவுகளில் சுமார் முப்பது லட்சம் மக்கள் பட்டினியால் சாவதற்குக் காரணமாக இருந்தவர் சேர்ச்சில்தான் என்று, இந்திய விஞ்ஞானியும் எழுத்தாளருமான மதுஸ்ரீ முகர்ஜி குற்றம் சாட்டியிருக்கிறார். இயற்பியல் படித்துவிட்டு உயர்படிப்புக்காக அமெரிக்கா சென்ற மதுஸ்ரீ, ‘சயன்ரி∴பிக் அமெரிக்கன்’ இதழின் முன்னாள் ஆசிரியர்.

வங்காளப் பஞ்சம் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன் தம் ஆய்வைத் தொடங்கிய மதுஸ்ரீ, பிரிட்டிஸ் நூலகத்தில் இருக்கும் பல்வேறு ஆவணங்களை ஆராய்ந்ததில், முப்பது இலட்சம் மக்களின் சாவுக்கு சேர்ச்சில் பொறுப்பேற்றுத்தான் ஆகவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். எனவே, தம் நூலுக்கு ‘சேர்ச்சிலின் இரகசிய யுத்தம்’ (Churchill’s Secret War) என்றே பெயரிட்டிருக்கிறார்.

ஹிட்லருக்கு எப்படி யூதர்கள் மீது வெறுப்பு இருந்ததோ, அதேபோல சேர்ச்சிலுக்கும் இந்தியர்கள் மீது கடுமையான இனத்துவேசம் இருந்தது. லண்டனில் பரிஸ்டர் பெற்றவரான காந்தியை, ‘அரை நிர்வாணப் பக்கிரி’ என்று வர்ணித்தவர் சேர்ச்சில்தான்.

1940ல் முஸ்லீம் லீக் உருவாகி காங்கிரசுக்குப் போட்டியாக அரசியல் செய்தபோது, சேர்ச்சிலின் கருத்து என்ன தெரியுமா? “ரொம்ப நல்லது. சீக்கிரமே இந்துக்களும் முஸ்லீம்களும் அடித்துக்கொண்டு சாகட்டும். இரத்தக் களறி ஏற்படட்டும்”.

அப்படிப்பட்டவர் 1943ல் வங்காளத்தில் பெரும் பட்டினிச் சாவுகள் ஏற்பட்ட போது, மூர்க்கத்தனமாக உதவி செய்ய மறுத்தார் என்பதை, மதுஸ்ரீ தமது ஆய்வில் வெளிப்படுத்தி இருக்கிறார். உண்மையில் உணவு போதாததால் மட்டுமோ, அடுத்த விளைச்சல் சரியாக நடக்காததால் மட்டுமோ மக்கள் சாகவில்லை.

சேர்ச்சிலின் அரசு வங்காளத்திலிருந்த எல்லாக் கோதுமையையும் தனது இராணுவத்துக்கு வாங்கி முடக்கத் தொடங்கியது. பர்மாவிலிருந்து அரிசி வருவது வழக்கம். அதை வரவிடாமல் சேர்ச்சிலின் அரசு செய்துவிட்டது. ஜப்பானியர்கள் பர்மா வழியே நுழைந்தால் அவர்கள் வசம் ஒரு படகு, மாட்டு வண்டி, யானை, கார் எதுவும் கிடைக்கக் கூடாதென்று முன்கூட்டியே வங்க – பர்மா எல்லைகளிலிருந்த எல்லாவிதமான வாகன வசதிகளையும், அங்கிருந்த அரிசியையும் கூட பிரிட்டிஸ் இராணுவம் கைப்பற்றிவிட்டது. இந்தப் படகுகளிலும் வண்டிகளிலும்தான் பர்மாவிலிருந்து அரிசி வரவேண்டும்.

தனியார் சரக்குக் கப்பல்கள் முதல் இராணுவக் கப்பல்கள் வரை இந்தியப் பெருங்கடலில் இருந்த எல்லாக் கப்பல்களையும் இராணுவம் தம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டது.

அவுஸ்திரேலியாவிலிருந்து கோதுமையை வரவழைத்து வங்காளத்துக்குத் தரும்படி, வைஸ்ராய் லின்லித்கோ சேர்ச்சிலைக் கேட்டார். சேர்ச்சில் மறுத்துவிட்டார்.

''பஞ்சத்தால் மக்கள் செத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்றால், எப்படி காந்தி மட்டும் இன்னமும் சாகாமல் இருக்கிறார்?'' என்று சேர்ச்சில் பதில் தந்தி அனுப்பினார்.

அவுஸ்திரேலியாவும், கனடாவும் உணவு அனுப்பத் தயாராக இருந்த போதும், சேர்ச்சில் அதற்குக் கப்பல் தர மறுத்துவிட்டார். உணவுக் கப்பல்கள் எல்லாம் பிரிட்டிஸ் இராணுவத்துக்குத் தானியங்கள் எடுத்துச் செல்லவும், யுத்தம் முடிந்த பிறகு கிரீசிலும் ஐரோப்பாவிலும் தேவைப்படக் கூடிய உணவுகளை ஸ்டாக் செய்வதற்கும் சேர்ச்சில் அனுப்பிக் கொண்டிருந்தார்.

ஜப்பான் வசம் பர்மா இருந்த போதும் வங்கத்துக்கு அரிசி அனுப்ப ஏற்பாடு செய்ய தாம் தயார் என்று நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அறிவித்தார். அந்தச் செய்தியையே வெளியிடக் கூடாது என்று சேர்ச்சில் அரசு சென்சார் செய்துவிட்டது.

விளைவாக வங்காளத்தின் கிராமங்களிலெல்லாம் மக்கள் உணவு இல்லாமல் பட்டினியால் தினசரி 5000, 6000 என்று தெருக்களில் செத்து விழுந்து கொண்டிருந்தார்கள். அரிசி வடித்த கஞ்சித் தண்ணீரைப் பிச்சையாகக் கேட்டு கொல்கத்தா நகர வீதிகளில் நுழைந்த கிராம மக்கள் பெரிய பெரிய ஓட்டல்களின் வாசல்களில் செத்து விழுந்தார்கள். பிரிட்டிஸ் ஆட்சிக்காலத்தில் இந்தியாவெங்கும், தமிழ்நாடு உட்பட, பெரியதும் சிறியதுமாக சுமார் 40 பஞ்சங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எல்லாமே பிரிட்டிஸ் சுரண்டலினால் ஏற்பட்டவைதான்.

வங்கத்தில் மக்கள் செத்து விழுந்த போது கூட இந்தியாவிலிருந்து கோதுமையையும் அரிசியையும் பிரிட்டன் ஏற்றுமதி செய்து கொண்டிருந்தது. ஆறு இலட்சம் தொன் தானியங்கள் தேவை என்று வைஸ்ராய் கேட்டார். சேர்ச்சில் அரசு கடைசியில் கொடுத்தது வெறும் 30 ஆயிரம் தொன்தான். ஆனால் 71 ஆயிரம் தொன் அரிசியை இலங்கையிலுள்ள ரப்பர் தோட்டங்களுக்கு அனுப்பியது.

ஏழாண்டு கால ஆராய்ச்சிக்குப் பிறகு மதுஸ்ரீ இந்த நூலை எழுதியிருக்கிறார்.
*

---

*13ம் பக்கத் தொடர்ச்சி..*

*மருத்துவக் காப்புறுதித் திட்டத்தில் ஒபாமா கொண்டுவர உத்தேசித்திருந்த சீர்திருத்தங்களும் தோல்வி கண்டுள்ளன. இத்தகைய காரணங்களால் கறுப்பு இன மற்றும் ஏழை மக்கள் மத்தியில் ஒபாமா மீது இருந்த நம்பிக்கை தகர்ந்து வருகிறது. அமெரிக்காவின் சனத்தொகையில் ஒரு வீதம் மட்டுமேயான செல்வந்த வர்க்கம், மொத்த தேசிய வருவாயில் 23 வீதத்தைத் தனதாக்கிக் கொள்ளும் அதேவேளையில், கடந்த 30 வருடங்களாக தொழிலாளர்களின் சம்பளம் உயர்வடையாமல் இருக்கின்றது அல்லது தாழ்வடைந்து செல்கின்றது.*

---

*பின் பக்கத் தொடர்ச்சி..*

*யாழ்ப்பாணத்தில் புற்று நோய் அதிகரித்தமைக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. தற்பொழுது மகரகமை புற்று நோய் வைத்தியசாலையில் உள்ள வைத்திய வசதிகளில் பெரும்பாலானவை யாழ்வைத்தியசாலையிலும் இருப்பினும், இன்னும் பல தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இதற்கு அரசாங்க உதவியுடன், புலம்பெயர் தமிழ் மக்களின் ஆதரவையும் தாம் எதிர்பார்த்திருப்பதாக அவை குறிப்பிட்டன.*

## தாமாகத் தாயகம் திரும்பும் இலங்கை அகதிகள்

*அண்மையில் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்த இந்திய காங்கிரஸ் கட்சியின் இளைஞர் அணித் தலைவரும், அடுத்த பிரதமராக வர வாய்ப்புள்ளவருமான ராகுல் காந்தி, போருக்குப் பிந்திய காலத்தில் இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் மீள் குடியேற்ற, புனர்நிர்மாணப் பணிகள் திருப்பிகரமாக இல்லை என கருத்து வெளியிட்டிருந்தார். இந்திய அரசின் முக்கியமான தலைவர்கள் யாருமே இவ்வாறான ஒரு கருத்தைப் பகிரங்கமாக வெளியிட்டிருக்காத சூழலில், அவரது கருத்து தனிப்பட்டது எனவும், விரைவில் நடைபெறவிருக்கும் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலை மனதில் கொண்டு கூறப்பட்டது எனவும், கருத்துகளும் முன் வைக்கப்பட்டன.*

*எது எப்படியிருந்த போதிலும், 'தமிழ் நாட்டில் இலங்கை அகதிகள் தமிழ் இன உணர்வாளர்களினால் நடாத்தப்படுவதைக் காட்டிலும், 'சிங்களப் பேரினவாத' அரசு, யுத்தத்தால் இடம் பெயர்ந்த தமிழ் மக்களை நடாத்தும் முறை சிறப்பானது' என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.*

*அதனால்தான், இப்பொழுது தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் பலர், தாமாகவே இலங்கைக்குத் திரும்பி வர ஆரம்பித்திருக்கிறாகள். இறுதிப் போர் நடைபெற்ற 2009ம் ஆண்டில் 843 பேரும், 2010ல் 2054 பேரும் தாமாகவே தாயகம் திரும்பியுள்ளனர். இது சந்தர்ப்பவாத அரசியல் நடாத்தும் ராகுல் காந்தி போன்றவர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் வை.கோபாலசாமி, பழ.நெடுமாறன், எஸ்.ராமதாஸ் போன்றவர்களுக்கும், இலங்கை அகதிகள் கொடுக்கும் பதில் என்றுதான் சொல்ல வேண்டும்.*

*இலங்கை அரசாங்கம், தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகள் தாயகம் திரும்புவதற்கான முறையான பிரயாண ஒழுங்குகளையும், மீள் குடியேற்றத் திட்டங்களையும் மேற்கொண்டால், பெருவாரியானோர் தாயகம் திரும்புவார்கள் என்பது நிச்சயம்*

*இந்திய அரசாங்கம் 2010 நவம்பர் 1ம் திகதி வெளியிட்ட ஒரு புள்ளி விபரத்தின்படி, 70,354 அகதிகள் தமிழ் நாட்டிலுள்ள 112 முகாம்களிலும், 32,467 பேர் முகாம்களுக்கு வெளியேயும், ஆக மொத்தமாக 1,02821 இலங்கை அகதிகள் இந்தியாவில் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இந்த மக்கள் அனைவரையும் மீண்டும் தாயகம் அழைத்து வரும் கடமை, இலங்கை அரசின் தட்டிக் கழிக்க முடியாத தலையாய பணிகளில் ஒன்று.*

## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்து செல்கிறது!

*2008ல் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் போது, ''ஆம், எம்மால் முடியும்'' என்ற கோசத்துடன் போட்டியிட்டு, அமோக ஆதரவுடன் வெற்றியீட்டிய பராக் ஒபாமா, தற்போது அமெரிக்க மக்கள் மத்தியில் செல்வாக்கை இழக்க ஆரம்பித்துள்ளதை கடந்த நவம்பரில் நடைபெற்ற ஜனப்பிரதிநிதிகள் சபைக்கான தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டியுள்ளன. இந்த தேர்தலிகளில் எதிர்க்கட்சியான குடியரசுக்கட்சி அமோக வெற்றியீட்டி, அச்சபையின் பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. அதன் மூலம், எதிர்காலத்தில் ஒபாமாவின் வெள்ளை மாளிகை நிர்வாகம் உருவாக்கும் சட்டங்களை நிறைவேற்றுவதில், சில சிக்கல்களை அது சந்திக்கலாம் எனக் கூறப்படுகிறது.*

*2010ல் தீவிரமடைந்த பொருளாதார நெருக்கடிகளிலிருந்து அமெரிக்காவை மீட்பதற்காக, பல்லாயிரக்கணக்கான கோடி டொலர்களை ஒபாமா நிர்வாகம் வங்கிகள், மோட்டார் உற்பத்தித்துறை, விமானக் கட்டுமானத் தொழில் என்பனவற்றுக்கு வழங்கிய போதிலும், அதிகரித்துச் செல்லும் தொழிலாளர் வேலை இழப்பைக் கட்டுப்படுத்தவோ, அல்லது வறுமையை ஒழித்துக்கட்டவோ அதனால் பயன் எதுவும் விளையவில்லை.*

*உத்தியோகபூர்வ தகவல்களின்படி, அமெரிக்காவின் வேலையற்றோர் தொகை, மொத்த தொழில்புரிவோரில் 9 வீதம் என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், உண்மையில் அது 30.5 வீதம் என ஒகியோவில் உள்ள* youngstown State University *யில் உள்ள தொழிலாளி வர்க்க கற்கைகளுக்கான நிலையத்தின் தகவல் கூறுகிறது. அதேநேரத்தில் வறுமை நிலையில் வாழ்வோரின் தொகையும், மொத்த சனத்தொகையில் 15 வீதம் அதாவது 44 மில்லியன் (4.4 கோடி) ஆகும்.*

*தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க..*

*முன்பக்கத்தொடர்ச்சி..*

*அதனால் தான் 1956க்குப் பின்னர், தமிழரசுக்கட்சியை தமிழ் மக்கள் பெருமளவுக்குப் பாராளுமன்றத்துக்கு அனுப்பிய போதிலும், உள்ளூராட்சி சபைகளை சேவை மனப்பான்மை கொண்ட இடதுசாரிக் கட்சிகளிடமும், தமிழரசுக்கட்சி அல்லாதவர்களிடமும் ஒப்படைத்து வந்துள்ளனர்.*

*உதாரணமாக, காங்கேசன்துறை, சங்கானை, சுன்னாகம், மானிப்பாய், வல்வெட்டித்துறை, கிளிநொச்சி பட்டின சபைகளையும், உடுப்பிட்டி, கரைச்சி, மல்லாகம் கிராம சபைகளையும் கம்யூனிஸ்ட் - சமசமாஜக் கட்சிகளிடம் ஒப்படைத்த மக்கள், பருத்தித்துறை, சாவகச்சேரி, வவுனியா, மன்னார் நகர சபைகளையும், யாழ்ப்பாண மாநகர சபையையும் தமிழரசுக்கட்சி அல்லாதவர்களிடம் ஒப்படைத்தனர். அதன் காரணமாக இந்த சபைகளை நிர்வகித்தவர்கள் மக்களுக்கு நல்ல சேவைகளை ஆற்றக் கூடியதாக இருந்தது.*

*தற்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் வடக்கு கிழக்கின் உள்ளூராட்சி சபைகள் போகுமாக இருந்தால், அவர்கள் அதன் மூலம் மக்களுக்கு சேவை செய்வதற்குப் பதிலாக, அவற்றை தமது அரசியல் நோக்கங்களுக்கு பயன்படுத்துவதிலேயே கவனம் செலுத்துவர். இதை உறுதிப்படுத்துவது போல அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'தினக்குரல்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி அமைந்துள்ளது.*

*அப்பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் சுரேஸ், 'தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதன் மூலம், தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை மேலும் வலிமையுடன் முன்னெடுத்துச் செல்வதற்கு அச்சபைகளைப் பயன்படுத்தும் வாய்ப்பைத் தமக்கு வழங்கும் படி' தமிழ் மக்களை அவர் கேட்டுள்ளார்.*

*உள்ளூராட்சி சபைகள் இயங்க ஆரம்பித்தால், யுத்தத்தால் சீரழிந்து போன தமது வாழ்க்கையை மீளக் கட்டமைக்க ஓரளவாவது வாய்ப்பு ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கும் மக்களுக்கு, சுரேசின் இந்த பேட்டி ஒரு பேரிடி என்பதில் சந்தேகம் இல்லை.*

*எனவே நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள், நன்றாகச் சிந்தித்து தமக்கு ஓரளவாவது நன்மை செய்யக் கூடியவர்களுக்கு வாக்களிக்க வேண்டும். 'வைக்கல் பட்டடை நாய்கள்' போன்று செயல்படக் கூடிய தமிழ் தேசியக் கூட்டமைப்பை நிராகரிக்க வேண்டும்.*

## *இலங்கையின் உள்ளூராட்சி சபைகளின் விபர அட்டவணை*

| மாகாணம் | மாவட்டம் | மாநகரசபை | நகரசபை | பிரதேச்சபை | மொத்தம் | உறுப்பினர்தொகை |
|---|---|---|---|---|---|---|
| மேல்மாகாணம் | கொழும்பு | 4 | 5 | 4 | 13 | 290 |
| | கம்பஹா | 2 | 5 | 12 | 19 | 354 |
| | களுத்துறை | இல்லை | 4 | 12 | 16 | 235 |
| மத்திய மாகாணம் | கண்டி | 1 | 4 | 17 | 22 | 331 |
| | மாத்தளை | 1 | இல்லை | 11 | 12 | 137 |
| | நுவரெலியா | 1 | 2 | 5 | 8 | 140 |
| தென்மாகாணம் | காலி | 1 | 2 | 17 | 20 | 244 |
| | மாத்தறை | 1 | 1 | 15 | 17 | 200 |
| | அம்பாந்தோட்டை | இல்லை | 2 | 10 | 12 | 138 |
| வடமேல் மாகாணம் | குருணாகல் | 1 | 1 | 18 | 20 | 338 |
| | புத்தளம் | இல்லை | 2 | 10 | 12 | 101 |
| வடமத்திய மாகாண | அநுராதபுரம் | 1 | இல்லை | 18 | 19 | 203 |
| | பொலனறுவை | இல்லை | இல்லை | 7 | 7 | 91 |
| ஊவா மாகாணம் | பதுளை | 1 | 2 | 14 | 17 | 216 |
| | மொனறாகலை | இல்லை | இல்லை | 10 | 10 | 104 |
| சப்ரமுவ மகாணம் | இரத்தினபுரி | 1 | 2 | 14 | 17 | 229 |
| | கேகாலை | இல்லை | 1 | 11 | 12 | 195 |
| வடகிழக்கு மாகாண | யாழ்பாணம் | 1 | 3 | 13 | 17 | 224 |
| | கிளிநொச்சி | இல்லை | இல்லை | 3 | 3 | 38 |
| | மன்னார் | இல்லை | 1 | 4 | 5 | 16 |
| | வவுனியா | இல்லை | 1 | 4 | 5 | 52 |
| | முல்லைத்தீவு | இல்லை | இல்லை | 4 | 4 | 38 |
| | மட்டக்களப்பு | 1 | 1 | 10 | 12 | 128 |
| | திருகோணமலை | இல்லை | 2 | 11 | 13 | 118 |
| மொத்தம் | | 18 | 42 | 270 | 330 | 4442 |

# வட புலச் செய்திகள்

## • ஆனையிறவு உப்பளத்தை மீண்டும் இயங்க வைக்க முயற்சி

அண்மையில் தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு உப்பளத்தில் வேலை செய்த தனது முன்னைநாள் ஊழியர்கள் 71 பேருக்கு, 31 மில்லியன் ரூபாவை நஸ்ட ஈடாக வழங்கியுள்ளது. கொடுப்பனவு வழங்கப்படவுள்ள மொத்தம் 268 பேரில் இவர்கள் ஒரு பகுதியினராகும்.

அத்துடன் வெகுவிரைவில் இலங்கையின் மிகப்பெரிய ஆனையிறவு உப்பளம் புனரமைப்பு செய்யப்பட்டு, அதன் உற்பத்தியை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. போர் நடந்த காலத்தில் விடுதலைப்புலிகள் இந்த உப்பளத்தின் பல கோடி ரூபா பெறுமதியான உபகரணங்களை சூறையாடிச் சென்றதுடன், உற்பத்தியையும் இடை நிறுத்தியிருந்தனர். அந்தக் காலகட்டத்தில் புலிகள் உட்பட தமிழ் மக்களும், முழு நாட்டு மக்களும் அம்பாந்தோட்டை, புத்தளம், மன்னார் உப்பளங்களில் விளைந்த உப்பையே தமது தேவைக்குப் பயன்படுத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனையிறவு உப்பளம் மீண்டும் செயல்படுமாக இருந்தால், அங்கு விளைவிக்கப்படும் உப்பு நாட்டின் மொத்தத் தேவையில் 30 வீதத்தைப் பூர்த்தி செய்யும். அத்துடன் சுமார் 2000 பேருக்கு அங்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். முன்னர் அது செயல்பட்ட காலத்தில் பரந்தனில் அமைந்திருந்த இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் தயாரிக்கப்பட்ட பல்வேறு இரசாயனப் பொருட்களுக்கு மூலப் பொருளாகத் தேவைப்பட்ட உப்பையும், ஆனையிறவு உப்பளமே வழங்கி வந்தது. பரந்தன் இராசனயத் தொழிற்சாலையும் போரின் போது புலிகளால் அழிக்கட்ட நிலையிலேயே இன்னமும் இருக்கின்றது.

## • மருதங்கேணி பாலம் திறந்து வைக்கப்பட்டது

பிரசித்தி பெற்ற கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஏ9 வீதியில், பளைக்கு அருகாமையிலுள்ள புதுக்காட்டுச் சந்தியிலிருந்து வடக்கேயிருக்கும் மருதங்கேணிக்கு செல்லும் பாதையிலிருந்த பெரும் பாலமும் திருத்தப்பட்டு, மீண்டும் போக்குவரத்துக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது. இந்தப் பாலம் தொண்டமானாற்றிலிருந்து ஆனையிறவு கிழக்கு வரை நீண்டு செல்லும் கடலேரி மீது கட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. கண்ணி வெடி இன்னமும் அகற்றப்படாத காரணத்தால் பருத்தித்துறை - மருதங்கேணி வீதி திறக்கப்படாதிருக்கும் நிலையில், இந்தப் பாலம் திறந்து வைக்கப்பட்டமையானது, அந்தப் பிரதேச மக்களின் போக்குவரத்து தேவையை பெருமளவு பூர்த்தி செய்துள்ளது.

போர் ஆரம்பமாவதற்கு முன்னர் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி சாலைகளிலிருந்து மருதங்கேணியை ஊடறுத்து ஆழியவளை வரை பஸ் சேவைகள் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. போர் காரணமாக அந்த பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டதுடன், மேற்படி பாலமும் சேதத்துக்குள்ளானது. இப்பொழுது அரசாங்கம் அதற்கு முன்னுரிமை கொடுத்து பாலத்தைத் திருத்தியமைத்துள்ளது.

## • யாழ்ப்பாணத்தில் புற்று நோய் பாதிப்பு அதிகரிப்பு!

யாழ்ப்பாணத்தில் புற்று நோயால் பாதிக்கப்படுவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாக, யாழ்.போதானா வைத்தியசாலை வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. தெல்லிப்பழையிலிருந்த புற்றுநோய் வைத்தியசாலை போர் காரணமாக செயல்படாதிருந்த நிலையில், ஆறு வருடங்களுக்கு முன்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்று நோய் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை சுமார் 15,200 பேர் வரையில் புற்று நோய்க்கு சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளதுடன், தற்பொழுது 3,000 பேர் வரையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

போரின் தாக்கங்கள், மாறி வரும் உணவுப் பழக்கங்கள், இளம் சந்ததியினரிடம் அதிகரித்து வரும் புகை பிடிக்கும், மது அருந்தும் பழக்கங்கள் என்பனவே, முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க..